Source: *Tamil Murasu*, p3
Date: 16 October 2018

# தொழில்முனைப்பு பண்புடைய என்யுஎஸ் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்

தொழில்முனைவர்களாக விரும்பும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக (என்யுஎஸ்) மாணவர்கள் புதிய உபகாரச் சம்பளம் ஒன்றுக்கு விண்ணப்பிக்கலாம். புகழ்பெற்ற கொடை வள்ளல் ஸ்டெஃபன் ரயடி அளித்துள்ள நன்கொடை மூலம் இது சாத்தியமாகும். அனைத்து துறைகளிலும் பயிலும் முதலாம் ஆண்டு மாணவர்களும் இந்த உபகாரச் சம்பளத்திற்கு விண்ணப்பிக்கலாம். நான்கு ஆண்டு பட்டக் கல்விக்கான பள்ளிக் கட்டணங்களைச் செலுத்த உதவுவதோடு மாணவர்களின் இதர செலவுக்காக ‘அலவன்ஸ்’ தொகையையும் உபகாரச் சம்பளம் வழங்கும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.